# NGM COLLEGE

(AUTONOMOUS)
Re-Accredited with 'A' Grade by NAAC
An ISO 9001 : 2015 Certified Institution
POLLACHI - 642 001



# உழவு பாரதம்

(சான்றிதழ் பாடத்திட்டம்)
(Certificate Course)


இரண்டாம் தாள்

## உழவர் ஏற்றமே உழவின் மேன்மை

மூன்றாம் தாள்

## மாசற்ற சூழலும் வேளாண் வளர்ச்சியும்

*Empower the Youth to Enrich the Nation*



# வேளாண் மீட்சி பற்றிய சிந்தனைகள்

- இந்தியா வேறு இந்திய வேளாண்மை வேறு அல்ல
- முதியவர்களான கடைசித் தலைமுறையினரின் கடுமையான உழைப்பால் மட்டுமே இப்போது விவசாயம் உயிர் பிழைத்துக் கொண்டிருக்கிறது
- தேக்கம் இன்றி ஆக்கம் தரும் கொள்கைகளே உண்மையான நாட்டுச் செல்வத்தை உருவாக்குகின்ற உழவன் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டு வரும்
- காந்திஜி கனவு கண்ட இராமராஜ்ஜியத்தால் தான் பலம் வாய்ந்த பாரதத்தை உருவாக்க முடியும். அதற்காக தன்னாட்சி மிளிரும் கிராம அமைப்பை உருவாக்க வேண்டும்
- விவசாயமும் விவசாயப் படிப்பும் அந்நியமாகவே இருக்கின்றன. இவற்றை அருகருகே கொண்டு வர வேண்டும்.
- விவசாயப் பட்டதாரிகளின் உத்தியோகம் குடியானவர்களோடு தொடர்புடையதால் அவர்களின் மொழியிலேயே விவசாயப் பல்கலைக்கழகங்கள் விவசாயத்தைக் கற்றுத் தர வேண்டும்.
- விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டி சரியான வழி எது என செயலில் காட்டி உற்பத்தியை அமோகமாகச்செய்யத் தூண்டுகின்ற விவசாய நிர்வாகிகளை வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கித் தர வேண்டும்.
- இரசாயன உரங்களால் நீர்த்துப்போன பூமியைக் கைவிடாமல் அவற்றின் சத்துக்களைப் பெருக்க வழிமுறைகளை விவசாய விஞ்ஞானிகள் எடுத்துக்கூற வேண்டும்.
- நிரந்தர பாசன வசதிக்கு நதி நீர் இணைப்பைச் செயல்படுத்த வேண்டும்
- குழாய்க் கிணறுகளின் ஆழத்தின் அளவை சட்டப்படி கட்டுப்படுத்தி நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டும்.
- விவசாயத்திற்கு அனைத்திந்தியச் சந்தையை உருவாக்கி விவசாயத்தை வருமானம் தரும் தொழிலாக உருவாக்க வேண்டும்.
- நவீன இயந்திரங்களின் மூலம் கிராமப்புறக்கைவினைத் தொழிலுக்கு மறுமலர்ச்சி தர வேண்டும்.
- விவசாய விளை பொருள்களைப் பதப்படுத்தும் துறையை மேம்படுத்தி கிராம வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டும்.
- இந்திய விவசாயத்தை நலிவடையச் செய்யக் கூடிய முயற்சி எதிலும் யாரும் ஈடுபடக் கூடாது என்பதே எனது வேண்டுகோள்.

**– அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்**

# உழவு பாரதம்

## சான்றிதழ் பாடத்திட்டம்
## (Certificate Course)

# உழவர் ஏற்றமே உழவின் மேன்மை

## இரண்டாம் தாள்

பதிப்பு

**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி**

(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு, ஏ தகுதி,
ஐ.எஸ்.ஓ.9001-2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி - 642 001

பாடநூல்

# உழவர் ஏற்றமே உழவின் மேன்மை

மற்றும்

# மாசற்ற சூழலும் வேளாண் வளர்ச்சியும்

பதிப்பு : முதற்பதிப்பு - 2019

வெளியீடு : என்.ஜி.எம் கல்லூரி

பதிப்பகம் : ருக்மணி பதிப்பகம், கோவை

**ISBN No. : 978-93-87009-15-8**

## ஆலோசனைக் குழு

**டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்**

தலைவர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

முனைவர் க.பழனிச்சாமி

விஞ்ஞானி, பன்னாட்டு நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிறுவனம், பூசா, புதுடெல்லி.

பொறியாளர் இளங்கோவன் (ஓய்வு)

பொதுப்பணித்துறை நீர்ஆதாரங்கள் பிரிவு,

பரம்பிக்குளம், ஆழியார் வடிநில வட்டம், பொள்ளாச்சி

## நூல் ஆக்கக் குழு

**தலைவர்**

**முனைவர் பொ.மா.பழனிசாமி,** முதல்வர்

ஆசிரியர்

முனைவர் ப.கிருஷ்ணதுளசிமணி, தலைவர், பொருளாதாரத் துறை

கௌரவ ஆசிரியர்கள்

முனைவர் சு.செல்வக்குமார்
உதவிப் பேராசிரியர்
முதுகலைத் தமிழ்த்துறை

முனைவர் க.பூங்கொடி
தலைவர்
முதுநிலை வேதியியல்துறை

என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

# பொருளடக்கம்

**அணிந்துரை**
**வாழ்த்துரை**
**நுழைவாயில்**

1. இயந்திரம் ஒரு மந்திரம்
*முனைவர் சா.ஜனப்பிரியா* ..... 1

2. செல்வம் பெருக்கும் மதிப்புக் கூட்டல்
*Er. மதுராமகிருஷ்ணன்* ..... 7

3. மண்புழுவும் மண்வளமும்
*Er. மதுராமகிருஷ்ணன்* ..... 13

4. சிறுதானிய உற்பத்தி ஆரோக்கிய விருத்தி
*முனைவர் எம்.வி.சத்தியபாமா* ..... 18

5. மூலிகை வளர்ப்பு - வறுமை தவிர்ப்பு
*முனைவர் ப.வடிவேல்* ..... 21

6. நம்மூர் வேளாண்மை நமக்குச் சொல்லும் பாடம்
*முனைவர் நிர்மலா சதீஸ்* ..... 26

7. உழவர் வடிவில் புதிய விடியல்
*முனைவர் க.பூங்கொடி* ..... 32

8. உழவனே உனக்கான நேரமிது, உரிமையை மீட்டு எடு
*முனைவர் சு.செல்வக்குமார்* ..... 38

9. அரசின் பார்வைக்கு
*Er. இளங்கோவன்* ..... 44

10. மண்ணின் மைந்தனாகிய நான்.....

11. பாடத்திட்டம்

12. மாதிரி வினாத்தாள்

# 8. உழவனே உனக்கான நேரமிது, உரிமையை மீட்டு எடு!

**முனைவர் க. செல்வக்குமார்**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் இலக்கியத் துறை,
என்.ஜி.எம். கல்லூரி.

## சிக்கல்கள் நிறைந்து வழியும் உழவர்களின் வாழ்வு

உணவு, மனிதனுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளுள் முன் நிற்பது உணவு. அந்த உணவை உற்பத்தி செய்யும் உன்னதப் பணியைச் செய்பவர்கள் உழவர்கள். உழவர்களையும் உழவுத்தொழிலையும் போற்ற 'உழவு' எனவேதான் திருவள்ளுவர் என்னும் அதிகாரம் படைத்துள்ளார்.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்"
"உழந்தும் உழவே தலை"
"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"
"உழுவார் உலகத்தார்க்கு ஆணி"

என்று உழவையும் உழவர்களையும் பெருமைப்படுத்தியுள்ளார் வள்ளுவர். இன்றைய சூழலில் உழவர்களின் வாழ்வு சிக்கல்கள் நிறைந்து வழியும் வாழ்வாக உள்ளது. "சோதனை மேல் சோதனை போதுமடா விவசாயம்" என்ற குரல்கள் திசையெட்டும் ஒலிக்கின்றன.

தங்களுக்கான வாழ்வை இழந்துவிட்ட நிலையில் ஒரு பாதுகாப்பற்ற மன உணர்வில் தான் பெரும்பாலான விவசாயிகளின் இன்றைய வாழ்வு உள்ளது. வேளாண்மை என்றால் 'உதவி' என்று பொருள். உழவினால் உலக உயிர்களுக்கு உதவி செய்த உழவர்கள் உதவி வேண்டி நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உழவர்களின் நிலையை எண்ணி

முப்போகம்
வெளஞ்ச மண்ணு
முட்காடா ஆகிப்போச்சு
ஏழெட்டு ஏருகட்டி
உழுததெல்லாம்
மறந்து போச்சு...
வாய்க்காத் தண்ணியில
குளிச்ச காலம்
மாறிப்போச்சு...
வரப்புல நடைபழகி
வாழ்ந்த காலம்
போயே போச்சு...

தோளுல மம்பட்டி
தூக்குன பெருசுக
துவண்டு போயிருச்சு...
வகைவகையா பயிருக
வெளஞ்சாலும் விவசாயி
மவுசு ஏறாது
சித்திரையில் மழை வல்ல...
சீறிப்பாயும் தண்ணி வல்ல...
பம்புசெட்டு தண்ணி பாச்ச
எல்லோருக்கும் வசதி இல்ல...
காத்திருந்த கண்ணில் எல்லாம்
கருவளையம் விழுந்திருச்சு
காலத்துல பயிறு பண்ணும்
காட்சி மாறிப்போயிருச்சு...
ஏருக் கலப்ப இத்துப் போச்சு...
மாடு கன்னு வித்துப் போச்சு...
மண்ண நம்ப முடியாம
தண்ண நம்பிக் கிளம்பியாச்சு...
மீண்டும் விவசாயம்
மீண்டு வரணுமுங்க...
படிச்சவுக யோசிங்க...
விவசாயத்த நேசிங்க...

-சினேகன்

என்று புதுக்கவிதை படைத்துள்ளான் இன்றைய கவிஞன்.

இந்தியாவில் உழவுத்தொழில் கவலைக்கிடமான நிலையில் உள்ளது என்பதற்கு பின்வரும் புள்ளி விவரம் சான்று தரும்.

1991 இல் இந்தியாவின் மக்கள் தொகை 84 கோடி. தற்போது சுமார் 127 கோடி. ஆனால் விவசாயிகளின் எண்ணிக்கை 1991 முதல் 2012 வரையிலான கால அளவில் 11/2 கோடிக்கு மேலாக குறைந்து போயுள்ளது. உலகமயமாதலுக்குப்பிறகு விவசாயத்தை விட்டு வெளிச்செல்வோர் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. ஒவ்வொரு மணிக்கும் 85 இந்தியர் விவசாயத்திலிருந்து விலகிய வண்ணம் உள்ளனர். தற்பொழுது 8% மக்களே விவசாயத்தில் உள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகளில் 2,70,940 விவசாயிகள் இறந்துள்ளனர் என புள்ளி விவரங்கள் கூறுகின்றன. நாள் ஒன்றுக்கு 62 விவசாயிகள் இறந்துள்ளனர். மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம், சத்திஸ்கர் மாநிலங்களில் தான் விவசாயிகளின் தற்கொலைகள் மிகுதி. 30 நிமிடங்களுக்கு என்ற நிலையில்! வட்டிக்காரர்களின் தொல்லைகளால் விதர்பாவில் மிகுதியான தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன.

1990 களில் விவசாயத்திற்கு என ஒதுக்கப்பட்ட பட்ஜெட் விழுக்காடு - 13% தற்போதோ அது வெறும் 8% மட்டுமே.

இந்திய விவசாயம் முதுகெலும்பு உடைந்து கவலைக்கிடமான நிலைக்கு நகர்ந்துவிட்டதை மேற்கண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் காவிரி டெல்டா பகுதியில் சுமார் 12 லட்சம் ஏக்கரில் முழுமையான பாசனம் செய்யப்படவில்லை. ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்து குறுவை சாகுபடி நடைபெறவில்லை. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகப் பருவ மழை ஏமாற்றிவிட்டது. 1971 இல் 28 . 20 லட்சம் ஏக்கராக இருந்த பாசனப் பரப்பு தற்போது 23 லட்சம் ஏக்கர்களாகக் குறைந்துள்ளது. நாட்டின் பல்வேறு இடங்களிலும் வேளாண் நிலங்கள் வேறுபாயன்பாட்டிற்காக மாற்றப்பட்டு வருவது மிகுதியாகி வருகிறது.

**"வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு**
**வாழும் மனிதர்க் கெல்லாம்"**

என்பார் பாரதி. அவ்வாறு இப்புவியில் வாழும் மனிதர்க்கெல்லாம் சோறுபோடும் உழவர்களின் வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள் தான் என்ன என்ன?

1. பருவ மழையின் சூதாட்டத்தால் நிகழும் வெள்ளம், வறட்சி, சீற்ற மழைப் பொழிவுகளால் நிகழும் பாதிப்புகள்.
2.விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமை.
3.வேலையாட்கள் பற்றாக் குறை.
4.விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதில் நிகழும் சிக்கல்கள்.
5.மண் வளம் குறைவதால் ஏற்படும் விளைச்சல் பாதிப்பு
6.இடுபொருட்களின் செலவு கூடுதல்.
7.பாரம்பரிய விதைகளைப் பெரும்பாலான விவசாயிகள் இழந்துவிட்டதால் விதை நிறுவனங்களிடம் விதைகளுக்காகக் கையேந்துவதோடு அவை வைக்கும் விலைக்கு வாங்கவேண்டிய சூழல்.
8.போதிய பணமின்மை.
9.குறைந்த அளவு நிலமுடைய விவசாயிகளால் நவீன தொழில் நுட்பங்களைக் கையாள்வதில் உள்ள சிக்கல்கள்.
10. சாயக்கழிவு, தோல்கழிவு போன்ற ஆலைக்கழிவுகளால் நிலமும் நிலத்தடி நீரும் பாதிப்புகளுக்குள்ளாதல்.
11.இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உரிய நேரத்தில் உரிய இழப்பீடுகள் கிடைக்கப்பெறாமை.
12. காட்டு விலங்குகள் மற்றும் பறவைகளால் ஏற்படும் தொல்லைகள்.
13. வேளாண் கடன்களுக்கு வசூலிக்கப்படும் வட்டிவிகிதங்கள்.
14. உள்நாட்டு உற்பத்தியைக் கணக்கில் கொள்ளாமல் அரசாங்கங்களால் திடீரென மேற்கொள்ளப்படும் இறக்குமதி, ஏற்றுமதி தொடர்பான நடவடிக்கைகள்
15. வேளாண் நிலங்கள் வேறுபயன்பாடுகளுக்காக கையகப்படுத்தப்படும் சூழல்களில் நிகழும் சிக்கல்கள்.
16. வேளாண் நிலங்களைப் பிற உபயோகத்திற்காக கையகப்படுத்தும்போது விவசாயிகளுக்கு உரிய மதிப்புத் தொகைகளையோ (அல்லது) இழப்பீட்டுத் தொகைகளையோ வழங்காமை.
17. அந்நில விவசாயிகளுக்கு உரிய மாற்றுத்தொழில் வாய்ப்புகள் கிடைக்கப்பெறாமை அல்லது ஏற்படுத்தித் தரப்படாமை.

18. உலக வர்த்தக நிறுவனங்களால் நிகழும் உள்நாட்டு வேளாண்மைக்கு எதிராக நிகழும் மறைமுகத் தாக்குதல்கள்.

19. மின் சார்ந்த சிக்கல்கள் பி.டி. பருத்தி, பி.டி.கத்திரி என விதைகளால் நிகழும் வேளாண்மை தொழில் பாதிப்புகள்.

20. உழவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்ளுக்கான விலையை அவர்கள் தீர்மானிக்கும் நிலை இல்லாமல் யாரோ, எங்கோ தீர்மானிக்கும் போக்கு.

21. விவசாயிகளுக்கு சமுதாயத்தில் மதிப்புக் குறைந்து வருவதால் அவர்களுடைய வாரிசுகளுக்கு பெண்கொடுக்க மறுக்கும் போக்கும் தற்போது வந்து விட்டது.

22. அரசாங்கங்கள் பட்ஜெட்டில் (வரவு செலவுத் திட்டம்) குறைந்த அளவே நிதி ஒதுக்குதல்.

23. உணவு சேமிப்புக் கிடங்குகள் பற்றாக்குறை.

24. உணவு பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டல் தொடர்பான நிலைகளில் உள்ள சிக்கல்கள்.

25. நீர் நிலைகள் ஆக்கிரமிக்கப்படலும், பராமரிப்பும் இல்லாத போக்குகள்.

26. மணல் போன்ற கனிம வளங்கள் எல்லை மீறி சட்ட விரோதமாகத் திருடப்படுவதால் விவசாயிகளின் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைதல்.

27.விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் உதவி, வட்டிவிகிதம், மானியம் தொடர்பானவற்றில் நிகழும் சிக்கல்கள், இழுத்தடிப்புகள்.

28. கடன், கந்து வட்டித் தொல்லைகள் என நீள்கின்றன விவசாயிகளுக்கான சிக்கல்கள்.

இவைபோன்ற சிக்கல்கள் விவசாயிகளைப் போராடும் நிலைக்குத் தள்ளியுள்ளன.

**விவசாயப் போராட்டங்கள், விளைவுகள்**

கடந்த காலங்களில் பல விவசாயப் போராட்டங்கள் பல வடிவங்களில் நிகழ்ந்துள்ளன; நிகழ்ந்தும் வருகின்றன.

♦ 1765 க்கும் 1785க்கும் இடைப்பட்ட காலத்தில் லேவாதேவி கொடும் வட்டியை எதிர்த்து நாடுமுழுவதும் 30-க்கும் மேற்பட்ட நாட்டை உலுக்கிய போராட்டங்களை விவசாயிகள் நடத்தினர்.

♦ 1860-ல் சவுரிசாராவில் உணவுப் பண்டங்கள் உற்பத்திக்குப் பதிலாக சாயம் காய்ச்ச அவுரிச்செடியை உற்பத்தி செய்ய விவசாயிகள் நிர்பந்திக்கப்பட்டதை எதிர்த்து ஆகிலேயர் ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தப்பட்டது.

♦ 1936-ல் துவக்கப்பட்ட அகில இந்திய விவசாயிகள் சங்கம் வரிக்கொடுமை, கொடும்வட்டி போன்றவற்றை எதிர்த்தும் நில உரிமைப் போராட்டங்களையும் நடத்தியது.

♦ 1946, 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் நாடு முழுவதும் நில மீட்புப் போராட்டங்களும், உழுபவனுக்கே நிலம் சொந்தம் மற்றும் நிலமற்றவர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

♦ 1970 -ல் மின் கட்டண உயர்வைக் கண்டித்து விவசாயிகள் தங்கள் மாட்டு வண்டிகளை ஓட்டிச் சென்று "மாட்டுவண்டிப் போராட்டங்களை" நடத்தினர்.

♦ 1972 -ல் விவசாய கடன்களுக்கு ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டித்து விவசாயிகள் போராட்டம் நடத்தினர்.

♦ இப்படி நடத்தப்பட்ட விவசாயப் போராட்டங்களின் போது பல விவசாயிகள் உயிர் நீத்தனர். அவர்களின் நினைவாக ஜீலை 5-ம் தேதி விவசாயிகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

♦ தற்பொழுது விவசாய சங்கம் 9-வது பிரிவுகளாக பிரிந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

♦ அண்மைக்காலமாக காவிரி டெல்டா பகுதியில் காவிரி நீர் பங்கீடு தொடர்பான போராட்டங்கள், உரிய விலை கேட்டு கரும்பு விவசாயிகள் பல இடங்களில் அவ்வப்போது நடத்தி வரும் போராட்டங்கள், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நடைபெற்று வரும் போராட்டம் ஆகியன கவனிக்கத்தக்க வகையிலான போராட்டங்களாக உள்ளன. இப்படிப் பல்வேறு போராட்டங்களை விவசாயிகள் தற்போது முன்னெடுக்க வேண்டிய தேவைகள் தான் எவை? கோரிக்கைகள் தான் என்ன என்ன?

**விவசாயிகள் முன்வைக்கும் கோரிக்கைகள்**

1. வறட்சிக்கு உரிய இழப்பீடுகள்
2. விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு நியாயமான விலை.
3. விவசாயக் கடன்கள் தள்ளுபடி
4. பயிர்களுக்குக் காப்பீடு
5. நதிகள் இணைப்பு
6. காவிரி நதி நீர் பங்கீட்டு மேலாண்மை ஆணையம் அமைக்க வேண்டுதல்.

போன்ற முக்கிய கோரிக்கைகள் விவசாயிகளால் முன்வைக்கப்படுகின்றன. மேலும், நீர் நிலைகளைத் தூர் வாருதல், பராமரித்தல், பால் கொள்முதல், மரபணு மாற்றுப் பயிர்க்களுக்கு எதிரான நிலைப்பாடு, வங்கிகளின் நடவடிக்கைகள், தொழிற்சாலைக் கழிவுகள், தென்னை பனை மரங்களில் தென்னம்பால் பனம்பால் எடுக்க அனுமதி, முல்லைப் பெரியார், கர்நாடக ஆந்திர மாநிலங்களில் காவிரி, பாலாறுகளின் குறுக்கே தடுப்பணைளைக் கட்டுதலுக்கான எதிர்ப்பு போன்ற பிரச்சினைகளை மையமிட்டும் போராட்டங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன.

**விவசாயிகளின் போராட்டங்களால் விளைந்தவை**

ஆங்கிலேயர் காலகட்டத்திலிருந்து நடைபெற்று வருகின்ற விவசாயிகளின் பல்வேறு போராட்டங்களால் விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் பல சட்டங்களும் கொள்கைகளும் அவ்வப்போது இருந்த அரசாங்கங்களால் வகுக்கப்பட்டுள்ளன.

“1952 - தஞ்சாவூர் குத்தகைதாரர் மற்றும் பண்ணையாளர்கள் பாதுபாப்புச் சட்டம்

1969 - குத்தகை உரிமைப் பதிவுச் சட்டம்

1970 - திருத்தப்பட்ட நில உச்சவரம்புச் சட்டம் (5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 15 ஏக்கர் என்ற அளவு, அதற்கு மேல் இருந்தால் 40 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம்)

1990 -கடன் நிவாரணச் சட்டம். ரூ 10000/ வரையிலான அனைத்து விவசாயிகளுக்குமான கடன் தள்ளுபடிச் சட்டம்

1990 - விவசாயத்திற்கான இலவச மின்சாரம் வழங்கும் சட்டம்.

2004 - விவசாயக் கடனுக்கான வட்டிக் குறைப்புச் சட்டம் (12% இருந்து 9% மாக விவசாயக் கடன் வட்டிக் குறைப்பு)''

(வே.துரைமாணிக்கம், உருக்குலையும் உழவுத்தொழில், ப.13-14)

போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளதோடு ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் விவசாயத்தை மேம்படுத்த பல கொள்கைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

''தமிழ் நாட்டில் உச்ச வரம்புச் சட்டப்படி உபரி என்று அறிவிக்கப்பட்ட நில அளவு, 1,08,000 ஏக்கர். இவை நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படைக்கப்பட்டது. இதில் பயனடைந்தவர்கள் 38500 பேர்.'' (மேலது)

அண்மையில் நதிநீர் இணைப்புக்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. குறிப்பிடத்தக்கது. தமிழக அரசும் வறட்சி நிவாரணமாக சுமார் 2000 கோடிக்கு கூடுதலாகவும் பயிர்க்காப்பீட்டுக்கு என சுமார் 2000 கோடிக்கு மேலும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**உரிமையை மீட்டெடுக்கவுள்ள வாய்ப்புகள்**

**''உலகம் வாழ உழவன் வாழ வேண்டும்''**

என்ற உண்மையை அரசும் மக்களும் உணர்ந்து வடிவமைக்கும் சட்டங்களிலும் திட்டங்களிலும் வேளாண்மைக்கு முன்னுரிமை அளித்திடல் வேண்டும்.

விவசாயிகளின் நன்மைக்கான சட்டங்கள் இயற்றுவதற்கு பிரிந்து கிடக்கும் விவசாய சங்கங்கள் ஒற்றிணைந்து செயல்படுவதோடு அரசியலிலும் பங்குபெற்று உரிமைகளை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும்.

இந்தியாவில் ஏற்பட்ட பசுமைப் புரட்சிக்கு முன்பு விதை, எரு, தொழில்நுட்பம் போன்ற நிலைகளில் தற்சார்புத் தன்மையுடன் விளங்கியமைக்கு 'மண் சார்ந்த வேளாண்மை' முறை காரணமாக இருந்தது. விவசாயிகள் மண்சார்ந்த இயற்கைவழி வேளாண்மையை முன்னெடுப்பதில் கவனம் செலுத்தும் போது களவு போகும் விதை, வர்த்தக உரிமைகளை மீட்க முடியும்.

சூழலியல் ஆய்வாளர் வந்தனா சிவா அவர்கள் 'நவதான்யா' என்ற அமைப்பை ஏற்படுத்தி நூற்றுக்கணக்கான விவசாயிகளை ஒன்றிணைத்து கூட்டுப்பண்ணை, தற்சார்பு வேளாண்மை முறைகளைச் செயல்படுத்தி வருவதைப் போன்று விவசாயிகள் ஒன்றிணைந்து மண்சார்ந்த வேளாண்மை, கூட்டுப்பண்ணை, இயற்கை வழி சார்பு வேளாண்மை போன்றவைகளை மேற்கொண்டால் பல்வேறு சிக்கல்களுக்குத் தீர்வு கிடைத்து வாழ்வாதாரத்தை வலுப்படுத்த வாய்ப்புகள் ஏற்படும்.

இந்திய உழவாண்மையின் இயல்புகளை, உரிமைகளை மீட்க உழவர்களும் உணவு உண்ணும் நுகர்வோர்களும் ஒன்றிணைய வேண்டியது இக்காலத்தின் கட்டாயம்!

இவ்வுலகம் அனைவருக்குமான நல்வாழ்வை நோக்கி நடைபோட அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட இனியாவது ஒரு விதி செய்வோம்! எதுவும் சாத்தியமே என்ற வலுவான நம்பிக்கையுடன்!

**'உணவின்றி அமையாது உலகு**
**உழவின்றி அமையாது உணவு'**

---

# சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
# உழந்தும் உழவே தலை

- திருக்குறள்

மானுடம் காக்க...
மண்ணும் நீரும் வளம் தரும் காடும் போற்றிக் காப்பேன் !
காற்றும் மழையும் கண்ணெனக் கொள்வேன்!
விளையும் மணியும் பொருளும் உயிரென மதிப்பேன் !
வளம் கெடா வாழ்வே சரியென நிற்பேன் !
புதியன பழையன யுக்திகள் யாவும்
நிலத்தைக் காக்கின் சம்மதம் சொல்வேன் !
சேற்றில் உழலும் உழைப்பே பெரிது !
வியர்வை சிந்தும் உழவனும் இமயம்
வளம் தரும் வாழ்வைப் படைத்திட இயலும் !
படித்ததை விதைப்பேன் !
விளைந்ததைப் பகிர்வேன் !
என் மண் என் கடமை இதுவென உணர்வேன் !
மண்ணின் மைந்தனென்பதை மறவேன் !
மானுடம் காக்க உழவை மீட்பேன் !
விண்ணும் மண்ணும் வாழ்த்தி நிலைக்க
பெற்ற புண்ணியம் இதுவென மகிழ்வேன் !

- இளைய பாரதம்








**NGM College**
90, Palghat Road, Pollachi - 642 001,
Coimbatore District, Tamilnadu, INDIA
Ph: 04259-234868, 234870 Fax: 04259 - 234869
E-mail: ngm@ngmc.org, www.ngmc.org


NAAC

TÜVRheinland CERT ISO 9001

Rukmani Offset Press, Cbe. © 0422-2672789